1972 ஆகஸ்ட் 23]

சக்திவாய்ந்த டிரான்ஸ்மிட்டர்கள் இருக்கின்றன. அதைப் போல் செய்ய மத்திய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாநில அரசு தெரிவிக்கும்.

**திரு. கே. வகாப் :** தலைவரவர்களே, சென்னை. திருச்சி போன்ற வானொலி நிலையங்களில் ஒலிபரப்பு செய்யப்படும் தமிழ் நிகழ்ச்சிகளில் இஸ்லாமிய நிகழ்ச்சிகள் மிகவும் குறைந்த அளவில் ஒலிபரப்பப்படுகிறது. அதைப்பற்றி மைனாரிட்டி மக்கள்மீது அக்கறை கொண்டுள்ள இந்த அரசு மத்திய அரசுக்குக் கூறி அந்த நேரத்தை அதிகப்படுத்த ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது பற்றிய விவரங்களை வானொலி நிலையத்தினிடத்தில் கேட்டுத் தக்கது செய்ய அரசு முன்வரும்.

### ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம்

*270 வினா—**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் பொது மைதானங்களில் ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தின் (R.S.S.S.) பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவது அரசு அறியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம் சென்னை மாநகரில் தனிப்பட்ட நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சொந்தமான திடல்களில் உடற்பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது; பொது இடங்களில் அல்ல.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, காந்தியைச் சுட்டது இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் என்று சொல்லப்பட்டது. அதைப் போலவே அண்மையில் டெல்லியில் காமராஜரைத் தாக்கியதும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர்தான் என்று சொல்லப்பட்டது. ஆகவே, அந்த மாதிரிக் கலவரங்கள், பிற்போக்கு எண்ணங்களைக் கொண்ட கோஷ்டி என்பதை வற்புறுத்தி மத்திய அரசோடு தொடர்புகொண்டு அதைத் தடை செய்வதற்கு நம்முடைய அரசு சிபார்சு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது அந்த இயக்கம் தமிழகக் காவல் துறையினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அவர்களின் நடவடிக்கைகளைப் பொறுத்து மத்திய அரசோடு தொடர்புகொள்ளும்.

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இயக்கம் நம்முடைய நாட்டிலே ஒரு அரசியல் கட்சியோடு தொடர்பு கொண்டுள்ளது என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இம்மாதிரியான பயிற்சி பெறும் நோக்கில் மத வெறி அல்லது வகுப்புவாதம் போன்றவைகளிலே இது ஈடுபடுகிறதா என்பதைக் கண்காணித்து அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தச் சங்கத்தின் நடவடிக்கைகள் 'கல்சுரல்' பண்பாட்டுத் தன்மைகள் வாய்ந்தவை என்றும் அரசியல் தன்மைகள் வாய்ந்தவை அல்ல என்றும் சொல்லப்படுகிறது. அது உண்மையா என்பதைக் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

### *Kannagi Temple*

*271 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that the Kannagi temple, mentioned in Silapathikaram written by Ilango Adigal is in ruins in a place between the Kerala and Tamil Nadu border; and

(*b*) if so, whether this Government have requested the Kerala Government to locate the place?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) தமிழ் நாட்டின் எல்லைக்கருகில் கேரள மாநிலத்தில் சுருளிமலைத் தொடரில் காணப்படும் பாழடைந்த கோயில் சரித்திரப் புகழ் பெற்ற கண்ணகியின் கோயிலாக இருக்கலாமென நம்ப இடமுள்ளது என்று கூறப்படுகிறது.

(இ) இக் கோயிலைப் புதுப்பித்துச் சிறப்பிக்க இதைத் தமிழக அரசிடம் ஒப்படைக்கக் கோரி கேரள மாநில அரசுடன் இவ்வரசு தொடர்பு கொண்டது. கேரள அரசின் இறுதியான பதில் கிட்டவில்லை.